RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1210

OPEN ACCESS

# சீதையின் மனச் சீரின்மையும் கம்பர் காட்டும் உளவியல் தீர்வும்

த. திருமாறன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Seetha's Distress and Kambar's Psychological Solution

T. Thirumaran [a, *]

[a] Department of Tamil, Presidency College, (Autonomous), Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: thirutamil2604@gmail.com

Received: 24-03-2022
Revised: 23-07-2022
Accepted: 30-07-2022
Published: 20-09-2022

**ABSTRACT**

Psychology is dealt with extensively by Kambar, in his literary work Kambaramayanam. Kambar while creating his characters, weaves into each of them, an emotional profile, not only elegantly, but also in fine detail. His poignant portrayals profoundly exhibit Kambar's clear knowledge of psychology and not stopping with his characters, it is pragmatic and relates to psychology of reallife individuals. An exemplification to psychologicalcharacterizations all through the epic is analysed in Seethai's confinement at the Asoka Vanam. Seethai's loneliness and her emotional disturbance, her despondency, desperation and resulting suicidal thoughts and Kambar's psychological solutions are examined in relation to present day observations and theories on psychology and thereby establishing Kambar's proficient handling of psychology in his literature is the focus of this research.

**Keywords:** Kambar, Ramayanam, Seethai, Hanuman, Ulaviyal, Kappiyam

## முன்னுரை

கம்பராமாயணம் வெறும் இராமாயணக் கதையைப் பறைசாற்றப் படைக்கப்பட்ட காப்பியம் அல்ல. இராமனுடைய கதையைக் களமாகக் கொண்டு அறம், அரசியல், வாழ்வியல், இல்லறவியல், தலைமைப் பண்பு, சகோதரத்துவம், தனிமனித ஒழுக்கம், சமூக ஒருமைப்பாடு, போர்நெறி என்று பலநிலைகளின் மேன்மைகளை எடுத்து இயம்புவதே கம்பராமாயணம். அப்பலதரப்பட்ட நிலைகளில் உளவியல் என்ற துறையும் கம்பர் தம்காப்பியத்தில் நெடுக உண்டு. மனித மனங்களின் உளவியலை அதன் சிக்கல்களை, அதற்கான தீர்வுகளைக் கம்பர் தன் காப்பியத்தில் போகிற போக்கில் பதிவு செய்கிறார். அவற்றை நுணுகி ஆராய்ந்தால் மட்டுமே உணர இயலும். அவ்வாறு, கம்பராமயணம் முழுக்க வெளிப்படும் உளவியல் கூறுகளின் ஒரு குறிப்பிடத்தக்க சான்றாக அசோக வனத்தில் இருக்கும் சீதையின் நிலையை மையமாகக் கொள்வதே இக்கட்டுரை. அசோகவனத்தில் சீதை தனிமையில் இருந்தபோது அவள் அடைந்த உளவியல் தடுமாற்றங்களையும், அதன் காரணமாக அவளுக்குத் தோன்றிய பலதரப்பட்ட எண்ணங்களையும், தற்கொலை மனப்பான்மையையும், அம்மனநிலையிலிருந்து மீண்டு வர அனுமனுடைய சொற்கள் தக்க தீர்வாக அமைந்ததையும் இக்கட்டுரை உளவியல் நோக்கில் ஆய்வு செய்கிறது.

## சீதையின் தனிமை நிலை

காப்பியத்தில் சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன் அவளை அசோக வனத்தில் அரக்கியர் பாதுகாக்க காவல் வைக்கிறான். சீதை மிகுந்த மனக்கவலை உடையவளாக, கவலை கொள்ளுதலைத்

தவிரவேறு வழி ஏதுமில்லாதவளாகத் தன் உறக்கத்தையும் இழந்து, ஒளி இழந்து காட்சியளிக்கிறாள்.

## சான்று

"துயில் எனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்

வெயிலிடைத் தந்த விளக்கு என ஒளி இலா மெய்யாள்"

சீதாதேவி, கண்கள் இமைப்பதும் இல்லாமல், விழித்தலும் மூடுதலும் இல்லாமல் மொத்தத்தில் உறக்கமே இல்லாமல் இருந்தாள். வெப்பம் மிகுந்த சூரியனுக்கு எதிரே ஏற்றி வைத்த ஒரு சிறுவிளக்கைப் போல ஒளி குன்றிய உடலை உடையவளாய் இருந்தாள் (Palaniappan, 2007). மேலும் சீதையானவள் தன்துயரத்தால் இருந்த நிலையைக் காட்சிப்படுத்தும் கம்பர்,

"விழுதல், விம்முதல், மெய் உற வெதும் புதல், வெருவல்,

எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்

தொழுதல், சோருதல், துளங்குதல், துயர் உழந்து உயிர்த்தல்,

அழுதல், அன்றி, மற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள்"

என்று பாடல் அமைக்கிறார் (Palaniappan, 2007). சீதாபிராட்டி ஸ்ரீராமனை நினைத்து கீழே விழுதலும், வாய் விட்டு புலம்புதலும், உடம்பு மிகவும் வெம்மை கொள்ளுதலும், அஞ்சுதலும், எழுந்திருத்தலும், மனங்கலங்குதலும், பரிதவித்தலும், வணங்குதலும், தளருதலும், நடுங்குதலும், துன்பத்தால் வருந்தி பெருமூச்சு விடுதலும், கண்ணீர் விட்டு அழுதலும் ஆகிய இவையே அல்லாமல் வேறுயாதொன்றும் செய்யத்தக்க தொழிலை அறியாதவளானாள் என்று சீதையின் அசோகவனத்து நிலை காட்டப்படுகிறது .

சீதையின் இந்நிலைக்குக் காரணம் அவளின் தனிமை மனப்பான்மையே (Lonliness). இராமனை விட்டு பிரியாதவளாகிய சீதை, இராவணனால் கடத்தப்பட்டு, தற்போது இராமனைப் பிரிந்து முதன் முதலாகத் தனிமையில் இருப்பதே அவள் இவ்வாறு பலவாராகத் துன்பப்பட காரணம். இத்தனிமை நிலையை உளவியல் பிரிவுகளில் ஒன்றான "சமூக உளவியல்" (Social Psychology), The emotional distress that results when inherent needs for intimacy and companionships are not met என்று விளக்கம் தருகிறது (VandenBos, 2007). அதாவது நெருக்கம் கொண்ட உறவு மற்றும் தோழமைக்கான உள்ளார்ந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படாதபோது ஏற்படும் உணர்ச்சி துயரம் என்று இந்நிலையை விளக்குகிறது. எனவே மேற்குறித்த சமூக உளவியலின் சான்றின் படி சீதையின் துயரம் தன்துணையைப் பிரிந்து வாடும் தனிமையினால் வெளிப்படுவதே என்பது இங்ஙனம் நிறுவப்படுகிறது.

## சீதையின் பலநிலை சிந்தனைகளும் மனச் சீரின்மையும்

சீதையின் தனிமை நிலையும் (Lonliness), தனக்கு உதவயாருமில்லை என்ற நிலைப்பாடும், இனி இராமனைக் காணப்போவதில்லை என்ற எதிர்காலம் குறித்த நம்பிக்கை இன்மையும், சீதையின் சிந்தனையைத் தடுமாற்றம் அடைய செய்கிறது. வெவ்வேறு வகையான எண்ணங்கள் சீதையின் மனத்தில் வந்து தோன்றுகின்றன. சீதையின் மனம் எவற்றை யெல்லாம் யோசித்துத் துன்பமுற்றது என்பதை வரிசையாகப் பாடல்களின் வழி காட்சிப் படுத்துகிறார் கம்பர்.

என்னை இராவணன் கவர்ந்து வந்த செய்தியை இராமனும், இலக்குவனும் அறிந்திருக்க மாட்டார்களா? அறிந்தாலும் இலங்கை எங்கு உள்ளது என்பதை அறிவார்களா? என்றெல்லாம் அவள் யோசிக்கத் தொடங்குகிறாள்.

"கண்டிலன் கொலாம் இளவலும்? கனை கடல் நடுவண்

உண்டு இலங்கை என்று உணர்ந்திலர்? உலகு எலாம் ஒறுப்பான்

கொண்டு இறந்தமை அறிந்திலராம்?' எனக் குழையா,

புண் திறந்ததில் எரி நுழைந்தாலெனப் புகைவாள்".

"இலக்குவனும், மானின் பின்னே தொடர்ந்து சென்ற தன் தமையனாரைக் கண்டானில்லை போலும். கண்டனாயினும், எல்லா உயிர்களையும் வருத்தி வருகின்ற இராவணன் என்னை எடுத்துக் கொண்டு போனதை இருவரும் தெரிந்திலர் போலும். அறிந்தாராயினும் ஒலிகின்ற கடலின் இடையிலே இலங்கா நகரம் உளதென்று அவ்விருவரும் அறிந்திலர் போலும் என்று எண்ணி வருந்தி புண்ணின் துளையிற்கனல் நுழைந்தாற் போல் மேன்மேல் மிகவருந்துவாள்" ஆயினாள் சீதை என்பதை இப்பாடல் குறிக்கின்றது (Gopala krishnamachariyar, 1939).

இங்குப் "புண் திறந்ததில் எரி நுழைந்தாலெனப் புகைவாள்" என்ற உவமையானது நோக்கத் தக்கது. ஏற்கனவே இருக்கும் புண்ணில் தீ நுழைந்ததைப் போல என்ற பொருளில் இது சீதையின் புண்பட்ட மனம் இவ்வாறு சிந்திப்பதால் மீண்டும் அதில் நெருப்பு புகுவதைப் போலத் துன்பப்படுகிறாள் என்பதை அழுத்தமாய் நிறுவுகிறது.

"மாண்டு போயினன் எருவைகட்கு அரசன் மற்று உளரோ,

யாண்டை என் நிலை அறிவுறுப்பார்கள்? இப் பிறப்பில்

காண்டலோ அரிது' என்று, என்று, விம்முறும் கலங்கும்

மீண்டு மீண்டு புக்கு எரி நுழைந்தாலென, மெலிவாள்".

சீதையின் எண்ண ஓட்டம் மீண்டும், மீண்டும் வெவ்வேறு கோணங்களில் யோசிக்கிறது. "என்னை இராவணன் எடுத்து வந்ததைப் பார்த்த கழுகுகளுக்குத் தலைவராகிய ஜடாயு இறந்து போய்விட்டர் போலும். அவரொழிந்த மற்றையோர் எனது நிலைமையை, இராம லட்சுமணர்க்குத் தெரிவிப்பவர் யாரும் இல்லை யாதலால், இந்த ஜன்மத்தில் அவர்கள் என்னைக் காணுதலோ அரிது என்று பலவாறு நினைத்து அழுவாள், கலங்குவாள் மீண்டும், மீண்டும்" என்பது மேற்குறித்தப் பாடலின் பொருள் (Gopala krishnamachariyar, 1939).

இவ்விடத்தில் தன் நிலையைச் சடாயுவைத் தவிர இராமனுக்கோ, இலக்குவனுக்கோ சொல்ல யாருமில்லை என்று சீதையின் கவலையைக் குறிக்கும் கம்பர் கூடுதலாகத் தனது வரிகளில் "மீண்டும் மீண்டும் புக்கு எரி நுழைந்தால் என மெலிவாள்." என்று குறிக்கிறார். மேற்குறித்த பாடலுக்கு முந்தைய பாடலில் அடிப்பட்ட புண்ணில் நெருப்பு நுழைந்ததைப் போல என்று குறித்த கம்பர். அதற்கு அடுத்த இந்தப் பாடலிலும் அதே உவமையைக் கூறி மீண்டும் மீண்டும் நெருப்பு நுழைந்தது போல எனப்பதிவு செய்கிறார். இது அவள் உள்ளம் இவற்றை மீண்டும் மீண்டும் பலமுறை எண்ணி உழன்றது என்பதை அழுத்தமாய் உணரச் செய்யும் பதிவாய் அமைகிறது என்பது இங்கே கருத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு தன் எண்ண ஓட்டங்களால் வருந்துகிற சீதை அதற்கு அடுத்த நிலையாகத்தான் முன்பு செய்த தவறை நினைத்தும் வருந்தத் தொடங்குகிறாள்.

"என்னை, நாயகன், இளவலை, எண்ணலா வினையேன்

சொன்னவார்த்தை கேட்டு, "அறிவு இலள்" எனத் துறந்தானோ?"

அளவற்ற பாவங்களைச் செய்தவளான நான், முன்பு பர்ண சாலையில் இளவல் இலக்குவனை மதிக்காமல், பின்விளைவுகளை எண்ணாமல், கடுஞ்சொற்களைக் கூறிநிந்தித்து அனுப்பினேனே? அதை இலக்குவன் இராமபிராணிடம் சொல்ல அதைக் கேட்ட என்னுடைய தலைவனான இராமபிரான். அவள் அறிவற்றவள் என்று கருதி என்னை மீட்கவராமல் என்னை ஒதுக்கிவைத்து விட்டாரோ என்று எண்ணிக் கலங்குகிறாள் (Palaniappan, 2015).

முன்பு மாரீசன் பொன்மானாய்த் தோன்ற, அதை வேண்டும் எனக் கேட்ட சீதையின் ஆசையைத் தீர்க்கும் பொருட்டு அம்மானைப் பிடிக்க இராமன் சென்றான். அதுமாயமான் என உணர்ந்த இராமன் அதன் மீது அம்பு எய்த, மாரீசன் உயிர் துறக்கும் நிலை ஏற்பட்டது. உயிர்போகும் வேளையில் மாரீசன் இராமன் குரலில் கூச்சலிட அதை கேட்ட சீதை இராமனுக்கு ஏதோ ஆபத்து எனப்பதரினாள்.

இலக்குவனை, இராமனைத் தேடிப் போகப் பணித்தாள். இலக்குவன், அது அண்ணன் அல்ல அண்ணனுக்கு ஒன்றும் நேரிடாது என்று சமாதானம் சொல்லிப் போகமறுக்கவே சீதை கோபப்பட்டு,

'நின்ற நின் நிலை இது, நெறியிற்று'

என்று பேசி விடுகிறாள். அண்ணனுக்கு ஆபத்து எனத் தெரிந்தும் நீ போகா திருக்கிறாய் நீ நல்ல நோக்கத்தில் இங்கு நிற்பது போல் தெரியவில்லை என்று அவனை சுடும் சொற்களால் தவறாகப் பேசிவிடுகிறாள்.

இதை தற்போது அசோகவனத்தில் தனிமையிலிருக்கும் போது எண்ணிபார்கிற சீதை கலங்குகிறாள். ஒருவேளை இதை அறிந்த இராமன் தன் தம்பியை தகாத வார்த்தைகளால் பேசியவள் வேண்டாம் என வரமறுத்து விட்டானோ என்று யோசித்துப் பதறுகிறாள்.

அதோடு நிற்காமல் அவளது மனமானது புதிது, புதிதாக அதீத கற்பனை சிந்தனைகளால் தடுமாறத் தொடங்குகிறது.

"வன் கண் வஞ்சனை அரக்கர் இத்துணைப் பகல் வையார்

தின்பர் என் இனி செய்யத் தக்கது என்று தீர்ந்தானோ?

தன் குலப் பொறை தன் பொறை எனத் தணிந்தானோ?

என் கொல் எண்ணுவது? என்னும் அங்கு இராப்பகல் இல்லாள்"

"கொடுந் தன்மையும், வஞ்சி தலையும் உடைய அரக்கர் இத்தனை நாள், சீதையை உயிரோடு வைத்திருக்க மாட்டார், தின்றே இருப்பார் நாம் இனி செய்யத் தக்கதுயாது? ஒன்று மில்லை என்று எண்ணி இராம பிரான் என்னைத் தேடுவதை விட்டாரோ? அன்றி, தன் சூரிய குலத்தாருக்கு இயல்பாயுள்ள பொறுமை, தனக்கு வகிக்கத் தக்க தொரு குணமாம் என்று எண்ணிக் கோபம் தனிந்து விட்டாரோ இதில் நான் என்ன வென்று நினைப்பேன் என்று இராத்திரி என்றும், பகல் என்றும் வேறுபாடு இல்லாமல் எப்பொழுதும் கவலைப்படுவாள்" எனச் சீதையின் சிக்கலடையும் மன நிலையைக் கம்பர் காட்சிப்படுதுகிறார் (Gopala krishnamachariyar, 1939).

மேலும் அவள் சிந்தனையானது,

"பெற்ற தாயரும், தம்பியும், பெயர்த்தும் வந்து எய்தி,

கொற்ற மா நகர்க் கொண்டு இறந்தார்களோ?"

இராமனின் தாயர்களும், தம்பியாகிய பரதனும், மீண்டும் ஒருமுறை கானகத்திற்கு வந்து அவர்களை வெற்றி பொருந்திய யாராலும் வெற்றி கொள்ள முடியாத அயோத்தி நகருக்குக் கூட்டிக் கொண்டு சென்று விட்டார்களோ" இவ்வாறு குழந்தைத் தனமான பல எண்ணங்களும் சீதையிடம் வெளிப்படுவதைக் கம்பரின் பதிவுகள் உணர்த்துகின்றன (Palaniappan, 2007). பின்வரும் சில பாடல்களில் அவள் கடந்த காலங்களில் இராமனோடு இருந்த இனிய நிகழ்வுகளை அசைப் போட்டு வருந்து வதையும் கம்பர் விளக்கமாய் வரைகிறார்.

## தொகுப்பு

ஆக சீதையின் எண்ண ஓட்டங்கள், தான் கடத்தப் பட்டதை இராமன் அறிவானா? அவனுக்கு யார் கூறுவார்?. அறிந்தாலும் இலங்கையை அறிவார்களா? தன்னைத்தேடி இராமன் வருவானா மட்டானா? என்பதில் தொடங்கி, இலக்குவனைச் சொன்ன கடுஞ்சொல்லால் என்னை வேண்டாம் என்று நினைத்து விட்டானோ? அரக்கர் என்னைக் கொன்று தின்று விட்டார்கள் என்று நினைத்து வரவில்லையோ? தன்குலப் பொறுமை காரணமோ? அல்லது மீண்டும் இராமனை அயோதிக்கு அழைத்து சென்று விட்டார்களோ என்று ஒன்றிலிருந்து ஒன்று தொடர்பில்லா தசிந்தனைகளாகச் சீதையின் மனம் பலநிலைகளில் அமைதியின்றி அல்லலுறுகின்றது.

இவ்வாறான நிலையை உளவியலில் Rumination என்று குறிப்பர். இந்நிலையை Obsessional thinking involving excesive, repetative thoughts or themes that interfere with other mental activity. It is common feature of "Generalized Anxiety Disorder" என்பர் (VandenBos, 2007). அதாவது மனதைப் பற்றியுள்ள ஒரு விடயத்தைக் குறித்து மிகக் கூடுதலாகச் சிந்திப்பதும், மீண்டும் மீண்டும் அதை வெவ்வேறு கோணங்களில் அசைபோடுவதும் அவ்வாறான எண்ணங்கள் மற்றமனச் செயல்பாடுகளில் குறுக்கிட்டுச் செயல்படாமல் தடுக்கும் நிலையையும் குறிக்கிறது. இது பொதுவான மனச் சீரின்மையின் பொதுக்கூறு என்று உளவியல் விளக்கம் அளிக்கின்றது.

ஆகவே, சீதையின் மனநிலையைக் கம்பர் பதிவு செய்த விதங்களை ஆய்ந்ததின் அடிப்படையிலும், தற்கால உளவியலில் சீதையின் இந்நிலையைப் பொருத்தும் கூறுகளைக் கருத்தில் கொண்டும் ஒப்பிட்டதின் அடிப்படையிலும் சீதையின் மனமானது Rumination என்ற நிலையில் Generalized Anxiety Disorder எனப்படும் பொதுமனச் சீரின்மையால் துன்பமுறுகிறது என்பது இங்ஙனம் மேற்சொன்ன சான்றுகளின் வழி நிறுவப்படுகிறது.

## சீதையின் தற்கொலை முயற்சி

அசோகவனத்தில் ஏற்கனவே மனச் சீரின்மையால் பல சிந்தனைகள் படையெடுக்க தவித்துக் கொண்டிருந்த சீதையை இராவணன் காண வருகிறான். தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு அவளிடம் கெஞ்சுகிறான். சீதை அவனை சற்றும் ஏரெடுத்துப் பாராமல் அவனைக் கடிந்து பேசிமறுக்கிறாள் இக்காட்சிகளை எல்லாம் இராமனின் ஆணை பொருட்டுச் சீதையைத் தேடி இலங்கை வந்த அனுமன் அந்த அசோக வனத்தில் ஒரு மரத்தின் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

இராவணன் அங்கிருந்து சென்ற பிறகு சீதையின் மனம் மேலும் துயரத்தால் சிரமப்படுகிறது. வாய் விட்டுப் புலம்பத் தொடங்குகிறாள்,

"வாராது ஒழியான் எனும் வண்மையினால்,

ஓர் ஆயிர கோடி இடர்க்கு உடையேன்;

தீராய் ஒரு நாள் வலி – சேவகனே!

நாராயணனே! தனி நாயகனே!"

திருமாலை நோக்கி "வீரனே! நாராயணன் என்னும் திருநாமம் பெற்றவனே ஒப்பற்ற தலைவனே! இராமபிரான் என்னை மீட்டு செல்ல வாராது அமைதியாக இருக்க மாட்டன் என்று நான் உறுதியாக நம்புவதால், கணக்கற்ற இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு நொந்து போய் இருக்கிறேன். இந்த என்னுடைய து ன்பங்கள் என்றாவது ஒருநாள் தீர்ந்து போகாதா?" என்பது அவளது புலம்பல் (Palaniappan, 2007). இவ்வாறு புலம்புகிற சீதை ஒரு கட்டத்தில் உயிர் விடுதலே தீர்வு என்ற மனநிலையை வந்தடைகிறாள்.

"என்று என்று உயிர் விம்மி இருந்து அழிவாள்

மின் துன்னும் மருங்குல் விளங்கு இழையாள்

ஒன்று என் உயிர் உண்டுஎனின் உண்டு இடர்யான்

பொன்றும் பொழுதே புகழ் பூணும் எனா"

இவ்வாறு சீதை "மீண்டும் மீண்டும் தனக்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டு துயருற்று, நெடு நேரம் வருந்தினாள் பின்னர் என் உயிர் என் உடலுல் இருக்கும் வரை எனக்குத் துன்பங்கள் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கும். எனவே நான் எப்போது இறந்து போவேனோ அப்போதுதான் எனக்குப் புகழ்வந்து சேரும்" என்று தற்கொலை குறித்த எண்ணத்திற்குள் சீதையின் சிந்தனை உட்செல்கிறது (Palaniappan, 2007).

பின்னர் தற்கொலைக்கான காரணங்களை மனத்தில் எண்ணுகிறாள். பலநாள் இலங்கையில் அரக்கர் மத்தியில் இருந்த எம்மை இராமன் எற்றுக் கொள்வானா? என்று நினைக்கிறாள். இராவணன் என்னைக் கவர்ந்து வந்தும் இங்கு இருக்கும் அரக்கியர் எல்லாம் என்னைத் தரக் குறைவாகப் பேசியவற்றை யெல்லாம் கேட்டும் உயிர் துறக்காமல் இருக்கிற என்னைப் போன்ற கொடியவள் யார் உளர் என்று எண்ணுகிறாள். இவ்வாறு பலவாறு சிந்திக்கிற சீதை ஒரு கட்டத்தில் அங்கு மரச் செறிவுடைய மாதவிப் பொதும் பரையை அணுகி உயிர் விடத் துணிகிறாள்.

“எய்தினள் பின்னும் எண்ணாத எண்ணி ஈங்கு

உய்திறம் இல்லை என்று ஒருப்பட்டு ஆங்கு ஒரு

கொய்தளிர் கொம்பிடை கொடி இட்டே தலை

பெய்திடும் ஏல்வையில்…”

மாதவிப் பொதும் பரை அணுகிய சீதை, தன் உயிர் துறக்கப் போகும் நிலையை மறுபடியும் எண்ணிப் பார்த்து, உயிர் துறத்தலைத் தவிர, உயிர் வாழ்ந்து பிழைக்கும் வழிவே றொன்றும் இல்லை என்று மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு, துணிந்து அங்கு அருகிலிருந்த தழைத் தளிர்கள் நிறைந்த ஒரு கொம்பின் கொடியைச் சுருக்கிட்டு தன் தலையை நுழைக்கத் துணிகிறாள் (Palaniappan, 2007).

இவ்வாறு படிப்படியாக மனச் சீரின்மை நிலையானது தற்கொலைக்குத் தூண்டும் நிலையைச் சீதையின் வாயிலாகக் கம்பர் வகுத்துக் காட்டுகிறார். மனச் சீரின்மையின் விளைவாக ஏற்படும் இத்தற்கொலை மனநிலையை உளவியலும் Suicide occurs in the context of major depressive episode என்று கூறிச் சான்று பகர்கின்றது (VandenBos, 2007).

எனவே சீதையின் மனச்சீரின்மை படிப்படியாகத் தற்கொலை மனநிலைக்கு வந்தடைந்த விதமானது, தற்கால உளவியல் கூறும் தற்கொலை நிகழும் சூழலோடும் அல்லது காரணங்களோடும் பொருந்தி நிற்பதைக் காணின், கம்பரின் சீரிய உளவியல் அறிவுவெ ளிப்படுகிறது. ஆக, தற்கால உளவியலின் படியே கம்பரின் உளவியல் பதிவும் பொருந்தி வருகிறது என்பது இங்ஙனம் நிறுவப்படுகிறது.

## தற்கொலை முயற்சியும் கம்பர் காட்டும் உளவியல் தீர்வும்

சீதை தற்கொலை செய்யும் பொருட்டு சுருக்கிட்டுத் தலையை உள்ளே நுழைக்கிறாள். இதை அனுமன் பார்க்கிறான்.

“கண்டனன் அனுமனும் கருத்தும் எண்ணினான்

கொண்டனன் துணுக்கம் மெய்த்தீண்டக் கூசுவான்”

அவளுடைய எண்ணம் என்ன என்பதை ஊகித்து அறிந்த அனுமன் உடனே திடுக்கிட்டு அச்சம் கொண்டான். அவளைத் தடுப்ப தென்றால் அவளது திருமேனியைப் பற்றியே விலக்க வேண்டும். அவ்வாறு செய்ய அனுமன் அஞ்சினான் (Palaniappan, 2007).

சீதை இறப்பின் வாயிலில் நிற்கிறாள் அவளைத் தொட்டுத்தான் காப்பாற்றும் நிலை உள்ளது. ஆனால் இதில் இரண்டு சிக்கல்கள் உண்டு. ஒன்று மாற்றான் மனைவியைத் தொட்டுத்தூக்க அனுமனுக்கு விருப்பமில்லை என்பது. மற்றொன்று மாற்றான் கவர்ந்து வந்ததையே காரணமாகக் கருதி, அதுதன் பெயருக்கு இழுக்கு என்று உயிர்விடத் துணிந்த சீதை. அனுமன் உயிர்காக்க அவளைத் தொட்டிருந்தால் மாற்றான் ஒருவன் தன்னைத் தீண்டினான் என்பதல் நிச்சயம் உயிர் துறப்பாள். எனவே அவளைத் தீண்டாமல் தடுக்கும் வழிகளை யோசிக்க வேண்டிய நிலையில் அனுமன் இருந்தான். ஐயோ என்றாலும், அம்மா என்றாலும், வேண்டாம் என்றாலும் சீதை யாரோ வருகிறார்கள் என்று விரைந்து உயிர் விடக்கூடும். எனவே அவளைத் தடுக்கும் வார்த்தை இராமனுடைய பெயர் ஒன்றே எனக் கணப் பொழுதில் உணர்ந்த அனுமன்.

அடைந்தனென் அடியேன் இராமன் ஆணையால் என்று இராமன் பெயரைச் சொல்லித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவள் முன் தோன்றுகிறான். மேலும்,

“குடைந்து உலகனைத்தும் நாடும் கொட்பினால்

மிடைந்தவர் உலப்பிலர் தவத்தை மேவலால்

மடந்தைநின் சேவடிவந்து நோக்கினான்”

என்கிறான். தன்னைக் காக்க இராமன் வரமாட்டான், உதவுவார் யாருமில்லை, இராமன் தன்னைக் கைவிட்டான் என்று எவற்றை யெல்லாம் குறித்துச் சீதை கவலை கொண்டாலோ அவற்றை எல்லாம் தன் சொற்களால் தெளிவுபடுத்தி அவள் கவலையைப் போக்குகிறான் அனுமன். ”இராம பிரான் கட்டளையால் நான் இங்கு வந்தேன். உன்னைக் காணும் பொருட்டு இவ்வுலகத்திலேயே ஒரு இடம் கூட விடாதவாறு நன்றாகத் துருவித் தெடுவதற்காக நெருங்கிச் சென்ற வானரர்கள் கணக் கற்றவர்கள் ஆவர்கள். நான் முன் பிறப்பில் செய்த தவத்தின் பயனால் இப்போது உன் சிவந்த திருவடிகளை வந்து தரிசிக்கும் பேறு பெற்றேன்” என்கிறான் (Palaniappan, 2007). இதனால் எதிர்காலம் குறித்த நம்பிக்கை இல்லாது இருந்த சீதைக்கு இராமன் உன்னைத் தேடி வருகிறான், கைவிட வில்லை, எண்ணற்ற வானரவீரர்கள் அவனுக்குத் துணையாக இருக்கின்றனர், அவர்கள் இராமன் ஆணையால் உன்னைத் தேடி வருகிறார்கள் எனவே இராமன் நிச்சயம் உன்னைக் காப்பான் என்று சீதைக்கு அனுமன் அறிவுறுத்துகிறான்.

அனுமனின் சொற்களைக் கேட்டுத் தெளிந்த சீதை புதிய நம்பிக்கை கொள்கிறாள். யாரும் அசோகவனத்தில் உச்சரிக்காத இராம நாமத்தை அனுமன் உச்சரிக்க கேட்டவள் பின்வருமாறு நினைக்கிறாள்

“அரக்கனே ஆகவேறு ஓர்அமரனே ஆகஅன்றிக்

குரக்கினத்து ஒருவனேதான் ஆகுககொடுமை ஆக

இரக்கமே ஆகவந்து இங்குஎம்பிரான் நாமம்சொல்லி

உருக்கினன் உணர்வைதந்தான் உயிர்இதின் உதவிஉண்டோ?”

”இவன் அரக்கனாக இருந்தாலும் சரி, அன்றி ஒரு தேவனானாலும் ஆகட்டும். அல்லாமல் இப்பொழுது காணப்படுகின்ற குரங்கு கூட்டத்துக்குக் தலைவனானாலும் ஆகட்டும். தீமையே ஆனாலும் ஆகட்டும் இவ்விடத்தில் என தெதிரில் வந்து எனது தலைவனான இராமனது திருநாமத்தை சொல்லி உணர்வை உருகச் செய்து, போகிற உயிரைப் போகவிடாது காப்பாற்றித் தந்தான் இதை விட பெரிய உதவி உண்டோ?” (Gopala krishnamachariyar, 1939). இங்கு இராமனுடைய பெயரைச் சொல்லி உயிரைத் தந்தான் எனும் இடம் தொட்டு, சீதையின் மனச் சீரின்மை குணமாகத் தொடங்கு வதைக் கம்பரின் பதிவுகளின் வழி உணர இயலும்.

அனுமன் பின்பு சீதையிடம் தொடர்ந்து பேசி அவளுக்கு நம்பிக்கை ஊட்டுகிறான். அவள் கேள்விகளுக்குப் பதில் கூறித் தேற்றுகிறான். ஒரு கட்டத்தில் சீதையை அனுமன் இப்போதே தங்களை இராமனிடம் சேர்கிறேன் வாருங்கள் என அழைக்க சீதை மறுக்கிறாள். எப்போது இராமனிடம் சேருவேன் என்று புலம்பிய சீதை, எப்போது அசோக வனத்திலிருந்து வெளியேறுவேன் என்று எப்போதும் எண்ணி வந்த சீதை தற்போது அதற்கான வழி கிடைத்தும் மறுக்கிறாள்.

“எல்லை நீத்தஉலகங்கள் யாவையும்என்

சொல்லினால் சுடுவேன் அதுதூயவன்

வில்லின் ஆற்றற்குமாசு என்றுவீசினேன்”

என்று பெரும் மனவலிமை படைத்தவளாய் வீரம் பேசுகிறாள் சீதை. கணக்கில்லாத எல்லா உலகங்களையும் எனது வார்த்தையினாலே எரித்து அழிப்பேன் அவ்வாறு செய்தால் இராமபிரானது

வில் தொழில் வன்மைக்குக் குறைவையுண்டாக்கும் என்று எண்ணி அவ்வாறு செய்யாது ஒழிந்தேன்" என்கிறாள்.

எந்தச் சீதை இனி இராமனைக் காண இயலாது என்று உயிர் விடத் துணிந்தாலோ அந்தச்சீதை அனுமனின் வருகைக்குப் பின்னால், அவனுடனான உரையாடலுக்குப் பின்னால் மனச் சீரின்மை கலைந்து மனவுறுதி பெற்றவளாய் வெளிப்படுகிறாள்.

தனிமையில் உழன்று (Lonliness), மனச் சீரின்மையால் பல வகை சிந்தனையால் காயப்பட்டுத் (Rumination), தொடர் மன அழுத்தத்தினால் தற்கொலை மனப்பான்மைக்குத் (Suicidal Thoughts) தள்ளப்பட்டு நிற்பவர்களுக்குத் தற்கால உளவியளில் முதற்கட்டமாக அவர்களைத் தேற்றும் விதமாய் அளிக்கப்படும் உளவியல் சிகிச்சைக்கு Counselling என்று பெயர்.

Counselling is aprocess of assistance extended by an expert in an individual situation to needy person. According to carl rogers counselling is a series of direct contact with the individual which aims to offer him assistance in changing the attitudes and behaviour (Tajne, 2017). "கவுன் செலிங் (Counselling) என்பது ஒரு தனிப்பட்ட சூழ்நிலையில் ஒருநிபுணரால் தேவைப்படும் நபருக்கு ஆலோசனையால் உதவும் ஒருசெயல் முறையாகும். காரல்ரோஜர்ஸ் அவர்களின் கூற்றுப்படி கவுன் செலிங் (Counselling) என்பது தேவைப்படும் தனி நபருடனான நேரடித் தொடர்புகளின் தொடர்ச்சி ஆகும். இது அவரது அணுகுமுறை மற்றும் செயல்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது" என மேற் சொன்ன ஆங்கில வரையரை கூறுகிறது.

இவற்றைக் கருத்தில் வைத்துப் பார்க்கின் தேவைப்படும் நபருக்கு ஆலோசனை (Counselling) வழங்கும் இடத்தில் அனுமனும். தேவைப்படும் நபராகச் (Needy Person) சீதை இருப்பதையும் நாம் உணரலாம். தனிமை, மனச்சீரின்மை, நம்பிக்கையின்மை என்ற பல உளவியல் காரணங்களால் தற்கொலை முடிவுக்குச் சென்ற சீதையின் அணுகுமுறை மற்றும் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்படச் செய்தது அனுமனின் உரையாடல் என்றால் அது கம்பர் எடுத்துரைக்கும் உளவியல் மருந்து என்றே கருத வேண்டும்.

ஆகவே இவ்விடத்தில் கம்பர் இலக்கியத்தை ஈண்டு நோக்கியதிலும், தற்கால உளவியல் கருத்துகளை அதனோடு ஒப்பிட்டதன் அடிப்படையிலும். மனச் சீரின்மையால் தற்கொலை மனநிலைக்குத் தள்ளப்பட்ட சீதைக்கு அனுமனுடன் அமைந்த உரையாடலே உற்றத் தேற்றியாகவும், அம் மனநிலையிலிருந்து மீண்டு வர உதவியாகவும் இருந்ததாலும் அவ்வுரையாடலே தற்காலத்தில் வழங்கப்படும் கவுன்செலிங் (Counselling) என்று நோக்க இடமுள்ளது என்பது இங்கே நிறுவப்படுகிறது.

## முடிவுரை

கம்பரின் உளவியல் குறித்த பதிவுகளுக்குச் சான்று பகரும் வண்ணமாகச் சீதையின் அசோகவன நிலை இருக்கிறது என்பதை மேற்சொன்ன கருத்துகளின் வழியே உணர இயலும். சீதையின் தனிமை நிலையும் (Lonliness), அவளது தடுமாற்றச் சிந்தனைகளும் (Rumination), தற்கொலை எண்ணமும் (Suicidal Thoughts) தற்கால உளவியல் சான்றுகளோடு ஒப்பிட்டு அவ்வாறே கம்பராலும் பதிவு செய்யப்பட்டுள்ளதைத் தக்க சான்றுகளோடு இக்கட்டுரை நிறுவுகிறது. அந்நிலைக்கு மருந்தாய் அமைந்த அனுமனின் உரையாடலைத் தற்கால உளவியலில் கூறப்படும் கவுன்செலிங் (Counselling) என்ற முறைமையோடு ஒப்பிட்டு அவ்விரண்டும் ஒரே தன்மையில் அமைவன என்பதும் இக்கட்டுரையின் வழி நிறுவப்படுகிறது.

## References

Gopala Krishnamachariyar, V.M., (1939), Kambaramayanam Sundhara Kandam, V.M. Gopala krishnamachariyar Company, Chennai, India.

Palaniappan, Pl., (2007), Kambaramayanam Sundhara Kandam, Santhamangai pathippagam, Chennai, India

Palaniappan, Pl., (2015), Kambaramayanam Sundhara Kandam, vanathi pathippagam, Chennai, India

Tajne, M.K., (2017), Hand Book of Counselling, ABD Publishers, Jaipur, India

VandenBos, G.R., (2007) APA Dictionary of Psychology, Washington DC, USA.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License